★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 6 ஜ. ஆகிர் 4 இதழ் 38

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20—3—83

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

JVC கமெரா மூலம்
அழகிய வீடியோ படப்பிடிப்பிற்கு

ranjanas
TV/VIDEO CLUB

ரஞ்சனஸ் வீடியோ
சென்ரர்

60, பெரியகடை, யாழ்ப்பாணம்.
6594

# மட்டக்களப்பில்

# நிரந்தர ராணுவமுகாம்!

## தளபதி வீரதுங்க நேரில் இடங்களை பார்த்தார்

(இரா. துரைரத்தினம்)

மட்டக்களப்பில் நிரந்தரக் கட்டங்களைக் கொண்ட, நிரந்தர ராணுவ முகாமொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான இடத்தை இராணுவத்தளபதி தெரிவு செய்யும் பொருட்டு, முக்கிய சில இடங்களைப் பார்வையிட்டார்.

இராணுவத்தளபதி திரு. வீரதுங்காவும், இராணுவ அதிகாரிகளும் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்கள்.

இராணுவத்தளபதியும், அதிகாரிகளும் மட்டக்களப்பில் நிரந்தரமான ராணுவ முகாமென்றை அமைப்பதற்கு ஒரு இடத்தைத் தெரிவு செய்யும்நடவடிக்கையிலீடுபட்டனர்.

கிழக்குமாகாணத்தில் சமீப காலத்தில், இளைஞர்கள் அசம்பாவிதங்கள் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளதாம். இவ்வித பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளப்படுவதாக தெரிய வருகிறது.

கிழக்குப் பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. பி. மகேந்திரன், மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனி முத்து ஆகியோருடனும் ராணுவத்தளபதி மாநாடு ஒன்றினை நடாத்தி சில முக்கிய முடிவுகளை எடுத்தார்.

## கொழும்பு பல்கலைக்கழகம்: பகிஷ்கரிப்பை கைவிட்டனர்!

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக கலை, விஞ்ஞான, சட்டமாணவர்கள் தங்கள் பகிஸ்கரிப்பினை கைவிட்டு விரிவுரைகளுக்கு செல்வதெனத் தீர்மானித்துள்ளனர்.

பகிஷ்கரிப்புக்குகாரணமான இரண்டு விடயங்களில் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் மாணவர்களுக்கு மிடையில் இணக்கம் ஏற்ப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மாணவர்கள் நாளை முதல் விரிவுரைகளுக்கு சமூகம்தருவார்கள் என்று எதிர்பார்ப்பதாக துணைவேந்தர் ஸ்டான்லி விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

(சூ)

## சென். பற்றிக்ஸ் வெற்றி சென்றல் - சென். ஜோன்ஸ் வெற்றி தோல்வி இல்லை!

(விளையாட்டு நிருபர் தேவா)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 66வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டியில் சென் பற்றிக்ஸ் மூன்று விதிகப்படியான விக்கெட்டுகளால்வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 85வது வருடாந்த கிரிக்கெட் போட்டி, எத்தரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

### ஸ்கோர் விபரம்

சென் பற்றிக்ஸ் 1வது இன்னிங்ஸில் மொத்தம் 148 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் 7 விக்கெட் நஷ்டத்துக்கு 146 ஓட்டங்களையும்பெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி 1வது இன்னிங்ஸில் மொத்தம் 76 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் மொத்தம் 132 ஓட்டங்களையும் பெற்றது.

சென் ஜோன்ஸ் கல்லூரி 1வது இன்னிங்ஸில் மொத்தம் 171 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் மொத்தம் 169 ஓட்டங்களையும் பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1-வது இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 199 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. 2-வது இனிங்ஸில், ஒரு விக்கெட் நஷ்டத்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

### வீரர் தாக்கப்பட்டார்

சென். ஜோன்ஸ் கல்லூரி துடுப்படிவீரர் நிசியந்தன் 2-வது இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 72 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறும்போது, திடீரென மைதானத்தினுள் புகுந்த ரசிகர் கூட்டத்தின் மத்தியில் சிக்குண்ட இவ்வீரர் இனந்தெரியாத சிலர் தங்களை கூட்டத்தோடு கூட்ட

(8-ட் பக்கம் பார்க்க)

## ஏலவிற்பனை - மீன்பிடி வள்ளம்

1983-ம் ஆண்டு பங்குனி மாதம் 26-ந் திகதி
சனிக்கிழமை காலை 10 மணியளவில்
17½ அடி இழைக் கண்ணாடி வள்ளம்
(இல LI/DJ/EK/PB:117)
மரைன் இன்டஸ்ரீஸ், வீ, கே. சபாரத்தினம்,
வள்ளச்சாலை, வல்வெட்டித்துறையில்
வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மக்கள் வங்கி, முகாமையாளர்.
சுன்னாகம்,
03-03-1983. (6427)

## ஓவியக்கலைஞர் அமரசேகரா காலமானார்

(கொழும்பு)

உலகப்புழ்க்பெற்ற இலங்கை ஓவியக் கலைஞரான "கேட் முதலியார்" ஏ. ஸி. எஸ். அமரசேகரா நேற்றுகொழும்பு தனியார்மருத்துவ மனையில் காலமானார்.

கொழும்பில்உள்ளதமதுகலா நிலையத்தில் பல மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வந்த இவரது ஓவியங்கள் பல சர்வதேச கண்காட்சியிலும் இடம் பெற்றுள்ளன. ஓவியக் கலையில் முதுபெரும் கலைஞரான இவரது திறமையினைபாராட்டி 1978-ம் ஆண்டு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது.

இவரது 100-வது பிறந்த தினம் இம்மாதம் 2-ம் திகதி கொண்டாடப்பட்டது.

(சூ)

## இலவச தொலைபேசிசேவை

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டி, கேரதீவு, திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளுக்கு சிவராத்திரி தினத்தன்று இலவச தொலைபேசி வசதி சேவையை யாழ். தொலைத்தொடர்புத் திணைக்களம் வழங்கியிருந்தது.

## நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி அறிவிப்பு

(கரவெட்டி)

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு ஆர். சிவகுருநாதன் கடமையிலீடுபட்டிருந்த போது அவரது காரியாலய அறைக்குள் பிரவேசித்த பத்திரிகை ஆலோசகரொருவர் அவரைத் தரக் குறைவாக, இன துவேஷ மனப்பான்மையுடன் ஏசி அவமரியாதைப்படுத்தியதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன இலங்கைப் பத்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

## சுங்க ஏலவிற்பனை

22-3-1983 (செவ்வாய்) காலை 10 மணியளவில்
ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில்
பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.
விற்பனையின் முழு நிபந்தனைகளும்
1954-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி
வெளியிடப்பட்ட 10675:ம் இலக்க அரசாங்கவர்த்தமானி
1-ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. 70 மூடை நனைந்த பீடி இலைகள்
2. 2 வீடியோ ரேப் றெக்கோர்டர் Nationel Video Tape Reorder Model No 300 கடலிலிருந்து எடுக்கப்பட்டவை.
3. 3 பொதி நனைந்த காற்சட்டைத் துணிகள் கடலிலிருந்து எடுக்கப்பட்டவை.
4. ஒரு இயந்திர வள்ளம்

எஸ். எம். ஜே. சேனரத்தின,
சுங்க சேகரிப்பாளருக்காக,
யாழ் மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-3-83. (6592)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திறம் அல்சேஷன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. திருமதி முருகேசபிள்ளை ஆசிரியை, சண்டிலிப்பாய். 6589

சுண்டிக்குழி கச்சேரி பாடசாலைகளுக்கு ஒரு மைல் தூரத்தில் கொழும்புத்துறை, இலந்தைக்குளம் வீதியில் உயர் அரச, வங்கி, கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்கள் வசிக்கும் சுற்றுடலில் நல்ல நீர் கிணற்றுடன் இரண்டரைப் பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: தபாற்பெட்டி இல. 62. யாழ்ப்பாணம். 6563

புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு உகந்த இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. சுற்றத்தில் உள்ள கிணற்று நீர் நல்லது. சனி, ஞாயிறு கிழமைகளில் தொடர்புகொள்ளவும்: 186, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (பெந்தேகோஸ்தே சபைக்கு முன்னால்) 6574

சொந்தப் பாவிப்பில் நல்ல நிலையிலுள்ள ஒஸ்ரின் கேம்பிறிட்ஜ், மொறிஸ் மைனர் கார்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஜெயசீலன், 16 கற்குழி வீதி, சாவகச்சேரி 6536

பாவனையிலுள்ள M.M.M கடைச்சல் இயந்திரம் [Lathe Machine] பெட் நீளம் 1950 M. M. விற்பனைக்குண்டு விலாசம்: புதிய நம்பர்: 138, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 6568

இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வீட்டுப் பாவனைக்கு உகந்த "COMEX" ½ H.P. மின்சாரத் தண்ணீர் பம்புகள் மலிவான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். நூர்வி என்ரபிறைஸஸ், கந்தப்பாசெட்டியார் லேன், யாழ்ப்பாணம். (சாந்தி சினிமா முன்பு) (6534)

## விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கும் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் மத்தியில் பிரதான வீதிக்கு மிக அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். M. S. மயில்வாகனம், கிழவானை வீதி, கோப்பாய். (6533)

சண்டிலிப்பாய், கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீடுகட்டக்கூடிய 2 துண்டுக்காணிகள் 15 பரப்பும், 9½ பரப்பும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். மு. செல்வரத்தினம் 40/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6539

ஜோதிட உலகில் புகழ் பெற்ற முன்னோடிகளான, தெல்லிப்பழை ஆயர்பாடி ஜோதிட நிலையத்தாரின் (1983-84 ருதிரோத்காரி) ஆயர்பாடி வருஷ ராசிபலன்கள் வெளிவந்து விட்டன. தமிழ் சித்திரை முதல் ஒரு வருஷ பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் தனித்தனிப் பிரதிகள் எங்கும் எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். தபாலில் பெற ராசியையும் குறிப்பிட்டு 10×50 சதமுத்திரை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: நிர்வாகி ஆயர்பாடி ஜோதிட நிலையம் தெல்லிப்பழை. 6485

## தேவை

மணமகள் தேவை. M. Sc. பொறியியல் M.B.A. பட்டதாரியும் அமெரிக்காவில் பொறியியலாளராக உயர் பதவி வகிப்பவரும் 30 வயதுள்ளவரும் வேளாள வகுப்பைச் சேர்ந்தவரும் வைத்திய கலாநிதிகள் இருவரை சகோதரர்களாக உடையவருமாகிய மணமகனுக்கு வேளாள வகுப்பைச்சேர்ந்த கல்வியறிவும் ஆங்கில அறிவுமுடையவரும் ஏறத்தாழ 5 அடி 3 அங்குல உயரமுடையவரும் 24 வயது வரையுடையவருமாகிய குடும்பம் நடாத்தும் தகைமையுடைய மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, சீதனம், இனசன விபரம் முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6557 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6557

## முதலாவது ஆண்டு நினைவாஞ்லி

உயர்திரு
செல்லப்பா
சுப்பிரமணியம்

தோற்றம் :
10-4-1925

மறைவு :
03-03-1982



எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி இவ்வுலக வாழ்வை நீத்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியடைகின்றது. காலங்கள் கடந்து சென்றாலும் உங்கள் நிழலிலேதான் நாங்கள் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். இந்த நேரத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்

திருமதி சு. கனகம்மா
"சண்முகஜோதி"
மில் ஒழுங்கை, மல்லாகம். 6570

## தேவை

வெளியூர் சிறிய குடும்பத்திற்கு நகர எல்லைக்குள் அல்லது சமீபமாக 300/-க்குள் பகுதி அல்லது சிறிய வீடு. ஒருவருட அட்வான்ஸ் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 6596 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண சிறந்த வேளாள குலத்தைச் சேர்ந்த ரூபா 2000/- மாச வருமானமுள்ள அரசாங்க உத்தியோகத்தரான 27 வயதுடைய மணமகனுக்கு இதே இனத்தைச் சேர்ந்த நல்ல சீதனத்துடன் அழகுள்ள மணப்பெண் தேவை. விண்ணப்பிக்க: விளம்பர இல:6571 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 6571

## வகுப்புகள்

'TOEFL' வகுப்புக்கள் Spoken English (Tape Lessons 3 மாத பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். நேரில் தொடர்பு கொள்ளவும். யோ. பிலிப்பையா, மே/பா, விக்ரோ மகேந்திரா, 5, (17) கோவில், வீதி, யாழ்ப்பாணம். 6580

## பயிற்சி

3 மாத எலக்றிக்கல் வயறிங் டிப்ளோமா பயிற்சி 28-3-1983-ல் ஆரம்பமாகின்றது. Ins.itute of Engineering Technology, 11-B, Momsac Building, Stanley Road, Jaffna. 6588

சுன்னாகம்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
சுன்னாகம்

## அறிவித்தல்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் 2000 மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், பழுதடைந்த வெற்று பரல்களும், பழுதடைந்த லொறி ரயர்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-ம் ஏனையவற்றுக்கு ரூபா 100/-ம் மீளளிப்பு வைப்புப் பணமாக சங்கத்தில் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 25-3-83ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்,

சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
18-03-83 6593

## இடமாற்றம்

வடநிதி லிமிறெற்
பருத்தித்துறை

21-03-1983 திகதி தொடக்கம் எமது அலுவலகம் பஸ் டிப்போவிற்கு எதிரிலுள்ள கட்டடத்திற்கு மாற்றப்படும்.

எமது புதிய விலாசம்:
வடநிதி லிமிறெற்
பிரதான வீதி
(பஸ் டிப்போவிற்கு எதிரில்)
பருத்தித்துறை.

நிர்வாகி
வடநிதி லிமிறெற்
6586

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## அஞ்சலிக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை இந்து சமயவிருத்திச் சங்கம் குமரர் பிரமஸ்ரீ செல்லையா ஐயர் இரசமலிங்க ஐயருக்கு அஞ்சலி கூட்டமொன்றை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் திரு. சி. விஸ்வலிங்கம் தலைமையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடத்தவுள்ளது.

இக்கூட்டத்தில் சிவஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள், சிவஸ்ரீ குகதாசக் குருக்கள், திரு எஸ். இரசசேந்திரம், முதலியார் வை. மகேசன், திருமதி பி. இராசநாயகம் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர்.

## விற்பனையாகின்றன!


இறக்குமதி
ஒட்டுப் பலகைகளும்
அழகிய தேக்கம்
முகப்புக் கதவுகளும்

வேண்டிய
அகல, உயரங்களில்
பெற்றுக்கொள்ளலாம்

இப்ராகிம்
ஜபார்ஜி,
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 22409


## யாழ்நகரில்

பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு

பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


## ராஜலட்சுமி ரெக்ஸ்ரைல் புறசெசிங் இன்டஸ்றீஸ்,

KNITTED MATERIAL BLEACHING, DYEING and FINISHING

எமது ஜப்பானிய இயந்திரங்களின் மூலம் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன்

பொத்தான் [Buttons], லேஸ், சாறி, துவாய் (Towel) முதலியனவும் Dye போட்டுக் கொடுக்கப்படும்.

"பொன்னர்வளவு"
தொல்புரம் - சுளிபுரம்

6558

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## அறிவித்தல்

இக்கோவிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளின் பெயராலோ, அல்லது விழாக் காலத்தில் கோவிலுக்கு வரும் பல ஆயிரக் கணக்கான இறைபயணி (யாத்திரிகர்) களுக்கு குடிநீர் விநியோகித்தல், அன்னதானம் வழங்குதல், தங்குமிட வசதிகள் அளித்தல் முதலியன ஏற்பாடு செய்வதாக போலிக் காரணம் கூறியோ பொது மக்களிடம் பணம், பொருட்கள் முதலியன கோரிவரும் தனிநபர்களுக்கும், தனிநபர்கள் சிலர் தம் சுயநலம் கருதி தாபித்துள்ள போலி ஸ்தாபனங்களுக்கும் எதுவித உதவியும் செய்யவேண்டாமென பொதுமக்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இக்கோவிலின் குருமார்களுக்கும் அறங்காவலர்களுக்கும்கூட அத்தகைய வேலைகளைச் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. சில தனிநபர்கள் கோவிலின் பெயரைக் கூறிக் கிராமப் புறங்களில் நிதி சேகரிப்பதாக நாம் அறியவந்துள்ளோம். இத்தகைய சமூக விரோதிகளை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் பிடித்து ஒப்படைக்கும் படியும், அவர்களைப் பற்றிய விபரங்களை எமக்கு அறியத்தருமாறும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம். கோவிலுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் "பொருளாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற முகவரிக்கு காசோலை / காசுக் கட்டளை / தபாற் கட்டளை மூலமாக தமது நன்கொடைகளை அனுப்பி வைக்கலாம். அல்லது யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் திறக்கப்பட்டுள்ள 12330-ம் இலக்க நடைமுறைக் கணக்கிலோ, அல்லது புங்குடுதீவு மக்கள் வங்கியில் திறக்கப்பட்டுள்ள 1399-ம் இலக்க நடைமுறைக் கணக்கிலோ பணத்தைச் செலுத்திப் பெற்ற வங்கிப் பற்றுச்சீட்டைத் தமது பெயர், விலாசம் முதலிய விபரங்களுடன் பொருளாளருக்கு அனுப்பி கோவில் அலுவலகத்திலிருந்து உத்தியோகபூர்வமான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் ரூபாய் நோட்டுக்களைத் தபாலில் அனுப்ப வேண்டாம்.

தங்கள் உண்மையுள்ள
நா. சிவராசசிங்கம்
செயலாளர், அறங்காவலர் சபை.

6542

# மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில்

# இந்தியா, சீனு சாதனே!

## பிரதமர் இந்திராவுக்கு ஐ. நா. விருது

நியூயோர்க், மார்ச், 19

ஐ. நா.வின் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு விருதைப் பெறுவதற்கு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவ்விருதைப் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது நபர் சீனவின் குடும்பநலத்துறை அமைச்சரானவர்.

பெருமளவு சனத்தொகையைக் கொண்டுள்ள சீனவிலும், இந்தியாவிலும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் இவர்கள் இருவரும் மேற்கொண்டு வரும் பணியைப் பாராட்டியே ஐ. நா. வின் இவ்விருதிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷைச் சேர்ந்த திரு. சௌத்ரி தலைமையிலான ஐ. நா. கமிட்டியே இவர்கள் இருவரையும் தேர்ந்தெடுத்தது.

இவர்களுக்கு ஒரு தங்கப் பதக்கமும், பட்டமும், 12,500 அமெரிக்க டாலர்களும் வழங்கப்படவுள்ளன. (வெ)

## திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நற்செய்திப் பணியகத்தின் ஆதரவில் யாழ். புனித சவேரியார் பெரிய குருமட மைதானத்தில் எதிர்வரும் 27, 28ம் திகதிகளில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி நடைபெறவுள்ளது. மாலை ஏழு மணிக்கு இக்காட்சி இரு தினமும் ஆரம்பமாகும். புனித யூபிலி ஆண்டாக இவ்வாண்டைப் பரிசுத்த பாப்பரசர் பிரகடனப்படுத்தியதை யொட்டி யாழ். கொழும்புத்துறை சவேரியார் குருமட மெய்யியல் மாணவர்கள் இந்நாடகத்தை வழங்குகின்றனர். (பவ)

## இன்று ஆரம்பம்

(வண்ணார்பண்ணை)

ஈச்சமோட்டை இளைஞர் கழகம் நடாத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதல் சுற்றுவட்ட இறுதியாட்டங்கள் இன்றும், நாளையும், நாளைமறு தினமும் நடைபெற விருக்கின்றன.

இப்போட்டியில் பத்துக்கழகங்கள் மோதுகின்றன. (க)

## சனசமூக நிலைய ஒன்றியக் கருத்தரங்கு

(வேலணை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு புங்குடுதீவு சர்வோதய அலுவலகத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளிலும் உள்ள சனசமூகநிலையங்களின் சமாசத்தின் தலைவர், செயலாளர்களுக்கிடையிலான ஒரு நாள் கருத்தரங்கை நடாத்துகிறது.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் தலைவர் திரு. வே. ப. வாரித்தம்பி தலைமையில் நடைபெற இருக்கும் இக் கருத்தரங்கில் ஒன்றியத்தின்கிளை ஒன்றியங்களைச் செயல்பட வைத்தலும் அதன் சேவைகளும் பழுதடைந்த நிலையங்களின் கட்டிடங்களைத் திருத்தியமைத்தல், புதிய கட்டிடங்களைக் கட்டுவித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

### இந்தியாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட

## மாநிலங்களுக்குமத்திய அரசு ரூ.407கோடி நிவாரணஉதவி

புதுடில்லி, மார்ச். 19

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு நிவாரண உதவியாக 407கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை வழங்குவதென்று இந்திய மத்திய அரசுதீர்மானித்துள்ளது.

இம்மாநிலங்களுக்கு கூடுதலான உணவு தானியங்களை வழங்குவதற்கும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி உட்பட 16 மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு விதைகள், உரங்கள். கிருமிநாசினிகள் ஆகியவற்றை மான்யமாக வழங்குவதற்காக மத்தியஅரசிடம் 15கோடி ரூபா உதவி கேட்டுள்ளதாக மாநில விவசாயத்துறை அமைச்சர் திரு. காளிமுத்து தெரிவித்தார். [வெ]

## ஹன்டி பேரின்பநாயகம் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சிறந்த கல்விமானும், அறிஞருமான ஹன்டி பேரின்பநாயகத்தின் முதலாவது நினைவுப் பேருரையை எதிர்வரும் புதன் கிழமை மாலை 4–30 மணிக்கு பேராசிரியர் ஜோன்வால்டர் பிக்னெல் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கிறார்.

'பண்பாட்டின் அடிவேர்கள்' என்ற தலைப்பில் இப்பேருரையைப் பேராசிரியர் பிக்னெல் நிகழ்த்துவார்.

## பபுவாநியூகினியிலுள்ள தீவில் பூமியதிர்ச்சி

லண்டன், மார்ச், 19

பபுவாநியூகினியிலுள்ள தீவு ஒன்றில் இடம்பெற்ற பூமி அதிர்ச்சியினால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இங்கு இடம்பெற்ற பூமி அதிர்ச்சியின்போது கட்டிடங்கள் ஏழு நிமிடங்கள் ஆடிக் கொண்டிருந்ததாகக் கூறப்பட்டது.

இப்பூமியதிர்ச்சியினால் ஏற்பட்ட சேதங்கள், உயிரிழப்புகள்பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. [வெ]

## வெளிவாரிமாணவர்களுக்கு திறந்த பல்கலைக்கழகத்தில் வகுப்புகள்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மாணவர்களுக்கான வகுப்புகளை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நடத்தும் பொறுப்பு திறந்த பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்படுமென்று பிரதி உயர்கல்வி அமைச்சர்திரு. அத்தநாயக்கா தெரிவித்தார்.

வெளிவாரி மாணவர்களாக தற்போது 8,000பேர் பதிவு செய்துள்ளதாகவும், இந்த ஆண்டு இது 18,000ஆக அதிகரிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாகவும், கொழும்பு பல்கலைக்கழகமாணவர்களின் பிரச்சினைக்கு உள் விவகாரங்களே காரணமென்றும் அவர் கூறினர், [வெ]

## இத்தாலி முன்னுள்மன்னர் 78 வயதில் காலமானர்

ரோம், மார்ச், 19

இத்தாலியின் முன்னுள் மன்னர் அம்பட்டோ தமது 78வது வயதில் ஜெனிவாவிலுள்ள மருத்துவமனையொன்றில் நேற்றுக் காலமானர்.

ஒரு மாதம் மட்டுமே இத்தாலியின் மன்னராக இவர் பதவியிலிருந்தார். இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் இத்தாலியில் முடியாட்சி ஒழிக்கப்பட்டதை படுத்து இவர் சுவிற்சிலாந்திற்குத் தப்பிச் சென்றார்.

சுவிற்சிலாந்தில் இவர் 36 ஆண்டுகள் வாழ்ந்தார். தமது நாட்டிற்குத் திரும்பச் செல்லாது 36 ஆண்டுகள் வெளிநாட்டில் வாழ்ந்த முதலாவது மன்னர் இவரென்பது குறிப்பிடத்தக்கது. [வெ]

## குடாரப்பு கொலைமுயற்சி: எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை நாகர்கோவில் பகுதியில் குடாரப்பு என்னும் கிராமத்தில் நடந்த கொலைமுயற்சி வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் தமிழ் பேசும் ஜூரி சபையினர் முன்னல் கடந்த 8 நாட்களாக விசாரணை நடந்து விசாரணை முடிவில் ஜூரி சபையினர் ஏகமனதாக எதிரி சுற்றவாளி என்று கூறியதைத் தொடர்ந்து எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் குடாரப்புவைச் சேர்ந்த நிக்கலஸ் சுவாம்பிள்ளை என்பவர் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி அதே ஊரைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அல்பிரெட் என்பவரை பாலைக்கத்தியால் வெட்டி கொலைசெய்ய எத்தனித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அதே இடத்தில் அதே நேரத்தில் எதிரி மரியாம்பிள்ளை மரியதாஸ் என்பவரை பாலைக்கத்தியால் குத்தி காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டார். சட்டமா அதிபர் சார்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாஸ் வழக்கை நடத்தினர். எதிரி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம், சட்டத்தரணி ரி. லிங்கராஜா, சட்டத்தரணி ரி. தனராஜசிங்கம், சட்டத்தரணி திருமதி குலநாயகி ரத்னபாலா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

சத்திரசிகிச்சைநிபுணர் கலாநிதி எஸ். பொன்னம்பலம், பேராசிரியர் கலாநிதி என். சரவணபவானந்தன், சட்ட வைத்திய அதிகாரி, காயக்காரர்கள் ஞானப்பிரகாசம் அல்பிரெட், மரியாம்பிள்ளை மரியதாஸ், சாட்சி தேவசகாயம் எட்வேட், பொலிஸ்சார்ஜன்ட்

[7-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் நாட்டிற்கு கிருஷ்ணநதி நீர்

புதுடில்லி, மார்ச், 19

தமிழ்நாட்டிற்கு கிருஷ்ணநதிநீர் வழங்கப்படுமென்று ஆந்திர பிரதேச முதலமைச்சர் திரு என். டி. ராமராவ் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

1976ம் ஆண்டு உடன்படிக்கையின் பிரகாரம் இந்நீர் வழங்கப்படுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆந்திர பிரதேசத்திற்குத் தேவையான நீரைப் பெற்ற பின்னரே தமிழ்நாட்டிற்கு நீர் வழங்கப்படுமென்றும் அவர் கூறினர். [வெ]

## எண்ணெய் விலையை மலேசியா குறைத்தது

கோலாலம்பூர், மார்ச், 19

'ஒபெக்' நாடுகள் எண்ணெய் விலையைக் குறைத்ததையடுத்து மலேசியாவும் எண்ணெய் விலையைக் குறைத்துள்ளது.

மலேசியா ஒரு பீப்பா எண்ணெய் விலையை 5 டாலர்களால் குறைத்துள்ளது. எகிப்து எண்ணெய் விலையை ஒரு பீப்பாவிற்கு 2 டாலர்களால் குறைத்திருந்தது தெரிந்ததே.


நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட் யாழ்ப்பாணம்.

போன்:23199 தந்தி; வைரம்

சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் புதிய மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

டில்கா வாச்வேக்ஸ்



DILKA WATCH WORKS OPPOSITE BUS STAND

பஸ் நிலைய எதிர் மேல்மாடி யாழ்ப்பாணம்.

போன் 24174

## பாராளுமன்றத்தில் கடந்த வாரம்:

# உரிமையைக்கேட்பதா அல்லது மறுப்பதா தீவிரவாதம்?

### 'பட்ஜட்' விவாதத்தில் பண்டிதரின் கேள்வி

அரசியல் வானில் அண்மை காலமாக அதிவிமர்சனத்திற்குள்ளாகி வரும் திகதியிடப்படாத அரசாங்க எம். பிக்களின் அந்த ராஜினுமாக் கடிதங்கள்—

எமது ஜனுதிபதி புதுடில்லியில் நடைபெற்ற அணிசேரா மகாநாட்டிலும் வெளியிலும் உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆகியன பற்றி தெரிவித்த கருத்துக்கள்—

உலக வங்கியிடமும் சர்வதேச நாணய சபையிடமும் இலங்கை பெற்ற கடன்கள்—

இளைஞர்களின் அமைதியின்மை ஆகிய விடயங்கள் கடந்த வாரம் மாநாடு மன்றத்தில் இடம் பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் முக்கிய இடத்தை வகித்துக் கொண்டன.

இவ்விவாதத்தில் கலந்து கொண்ட எம்.பிக்கள் பட்ஜட்டுக்கு அப்பால் எங்கெங்கோ எல்லாம் வெகுதூரம் சென்று கொண்டிருந்தனர். அவர்களை 'பட்ஜட்'டுக்கு அழைக்க வேண்டிய நிலை அடிக்கடி சபைக்குத் தலைமை தாங்கியவர்களுக்கு ஏற்பட்டது.

'பட்ஜட்' 2-ம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு 9 நாட்களும் 3-ம் வாசிப்புக்கு 17 நாட்களுமாக 26 நாட்கள் ஒதுக்குவது வழமை. இம்முறை குறுகிய காலத்துக்கான பட்ஜட் என்பதால் 9-ம் 7 மாக 16 நாட்கள் ஒதுக்கப்பட்டன' இதில் கடந்த வாரத்தில் 2-வது வாசிப்புக்கு அரசதரப்பினருக்கு 31 மணித்தியாலமும், எதிர்க்கட்சியினருக்கு 18 மணித்தியாலமும் ஒதுக்கப்பட்டிருந்தும் எதிர் தரப்பினருக்கு நேரம் போதியதாக இருக்கவில்லை.

#### ஒரு திருப்பம்

வடக்கிலிருந்து சபைக்கு வந்த எம். பி. ஒருவர் றுகுணு மக்களுக்காக அவர்களின் இறைமைஉரிமைக்காக குரல் கொடுத்தார். அவரது உரை விவாதத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது என்றே கூறலாம்.

அவர் வேறு யாருமல்ல— நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட சாவகச்சேரி 'நவம்'தான் அத்திருப்பத்தை ஏற்படுத்தினுர்.

வடக்கில் அமைதியின்றி காடுகளிலும் மேடுகளிலும் ஊண் உறக்கமின்றி அலைந்து திரியும் தமிழ் இளைஞர்களுக்காகவும் தமது உயிரையே துச்சமாக மதித்துபொலிஸ் நிலையங்களைத் தாக்கிய இளைஞர்களுக்காகவும் குரல் கொடுத்த வி. என். திகதியிடப்படாத கடிதங்களைக் கொடுத்துவிட்டிருக்கும் எம். பிக்களுக்காகவும் வாதாடினுர்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வடபகுதி இளைஞர்களுடன் ஜனுதிபதி பேச்சு நடத்த வேண்டும்.

திகதியிடப்படாத அந்த ராஜினுமாக் கடிதங்களை அந்தவர்களிடமே திருப்பிக் கொடுங்கள்,

றுகுணு பிரதேசத்தைசேர்ந்த 19 எம். பிக்கள் இல் சமல், அப்பிரதேச மக்களின்லசட்ட வாக்கம் செய்யும் உரிமை இன்றி-அவர்களின் இறைமையின்றி நடைபெறும் இந்த சபையின் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வையுங்கள்— என்ற கோரிக்கைகளை விடுத்தார்.

வடக்கு விவகாரங்களையும் தெற்கு பிரச்னைகளையும்பற்றி உரையாற்றியமையினுலோ போலும் அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் அவரால் உரையாற்ற முடியவில்லை. சபாநாயகருடன் பேராடி அருகிலிருந்து பருத்தித்துறை எம். பியிடம் சிலநிமிடங்களைக் கடனுகப் பெற்றே மேலும் உரையாற்றினுர்.

ஜனுதிபதியிடம் கையளிக்கப்பட்ட திகதியிடப்படாத ராஜினுமாக் கடிதங்கள் பற்றி சற்று சூடாகப் பிரஸ்தாபித்த வி. என். அதற்காக அரசாங்க எம். பிக்களின் பாராட்டுக்களையும் பெற்றுராம். அதனையும் அவரே சபையில் தெரிவித்தார்.

**- இ. கந்தசாமி -**

பகல் போசன இடைவேளையின்போது தம்மைச் சந்தித்த அரச எம் பிக்கள் தமது மேற்படி கூற்றுக்கு பாராட்டுத் தெரிவித்ததாகவும் கூட்டணி எம். பிக்கள் தமது செயலாளர் நாயகத்திடம் கொடுத்த ராஜினுமாக் கடிதம் பற்றி வினவியதாகவும் இடைவேளையின்பின் உரையாற்றும் போது கூறிய நவம், தமது ராஜினுமாக் கடிதம் பற்றியும் விளக்கினுர்.

இச்சபைக்கு வந்த சில எம். பிக்களுக்கு மக்கள் வழங்கிய இறைமையையும் உரிமையும் ஹர்ஷா அபயவர்த்தன என்பவர் ஸ்ரீகோதாவில் இருந்து கொண்டு பறித்தெடுக்கிறுரா? அவருக்கு யார் அந்த அதிகாரத்தைக் கொடுத்தது?

#### கூட்டணி நிலைமை

மக்களின் இறைமையை அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கியில் அடகு வைக்கலாமா? என்பன போன்ற பல கேள்விகளை எழுப்பிய வி. என். கூட்டணி எம். பிக்கள் இவ்வாண்டு ஆகஸ்டில் அதாவது மக்கள் 77 ல் தந்த ஆணைக்கான காலப்பகுதி முடிவடைந்தவுடன் தமது பதவிகளை ராஜினுமாச் செய்வதாகவே ஒரு ராஜினுமாக் கடிதத்தில் கையெழுத்திட்டு செயலாளர் நாயகத்திடம் கொடுத்துள்ளதாகவும் எந்த நிலையிலும் பத்திரிகையைப் பார்த்துதான் தமது ராஜினுமா பற்றி அறிய வேண்டியநிலை கூட்டணி எம். பிக்களுக்கு ஏற்படமாட்டாது என்றும் கூறினுர். தமது அரசியல் தந்திரத்தையும் அவர் அப்போது காட்டத்தவறவில்லை. ஆகஸ்டில் நிலைமை எப்படி இருக்குமோ தெரியாது என்பதை எண்ணிவிட்டார் போலும். எனினும் கூட்டணி உறுப்பினர்களின் ராஜினுமா பற்றிய இறுதி முடிவு கட்சியின் மாநில மகாநாட்டிலேயே மேற்கொள்ளப்படும் என்றும் கூறிவைத்தார், மாநில மகாநாட்டின் முடிவையே கட்சியும் எதிர்பார்த்திருக்கிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறும் அதன் கீழ் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களையும் மதகுருமார்களையும் விடுதலைசெய்யுமாறும் மதகுருமாருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை வாபஸ் பெறுமாறும் கோரிக்கை விடுத்தார் வி. என்.

பயங்கரவாதம் பயங்கரவாதம் என்று கூக்குரலிடுவதை நிறுத்திவிட்டு அந்தப் பயங்கரவாதத்துக் காரணத்தை அறிந்து அதற்குத் தீர்வு காணுங்கள் என்பதே கூட்டணி எம். பிக்களின் பொதுவான கோரிக்கையாக இருந்தது.

இக்கோரிக்கை முன்பும் பல தடவைகள் சபையின் உள்ளும் வெளியேயும் எழுப்பப்பட்டது தான். இதுவரை பலன் பூஜ்யம். இனிமேலாவது...?

#### புலி வரும்

''புலி புலி என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்றோ ஒருநாள் புலி வந்தே தீரும் என புலி வருமுன்னரே 72ம் ஆண்டில் எச்சரித்தேன்'' எனக் கூறிய பண்டிதர், தமது மற்றொரு முன்னைய எச்சரிக்கை பற்றி பின்வருமாறு கூறுகிறுர்.

இளைஞர்களின் எழுச்சியை மதிக்கவேண்டும்; இல்லையேல் நாட்டில் இரத்தம் சிந்தும் நிலைதான் ஏற்படும் என்றும் அன்று

(5-ம் பக்கம் பார்க்க)


வடபகுதி மக்களே! உங்கள் தேவை எதுவானுலும் சிரமமின்றி இலகுவாக பெறுவதற்கு பிரபல்யம் பெற்ற நிறுவனம் அம்பலவாணர் அன் சன்ஸ்

பாடசாலை அப்பியாசக்கொப்பிகள்-உபகரணங்கள்-மின்சாரவிசிறிகள்-றேடியோக்கள் - மணிக்கூடுகள் - அன்பளிப்பு அலங்காரப் பொருட்கள்-மின்சார உபகரணங்கள்-திருமண அழைப்பிதழ்-பேப்பர் றே-கப் அனைத்திற்கும் நகரில் நற்பெயர் பெற்றவர்

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற விபாபாரிகள் - மின்ஒப்பந்தக்காரர்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24291


தலைமையகம்;

பேர்ள் லேட்ஸ்-அம்பலவாணர் அன் சன்ஸ், 79, மலிபன் வீதி கொழும்பு. போன்: 24821—28244

லெட்சுமிபவான் 97, ஒல்ஹொட் மாவத்தை கொழும்பு. போன்: 24821



**விவசாயிகளே! இதோ புதுமையான சாக்கு**



தினமும் செலவுத்தானம் கூடி வரும் வேளையில் உங்களது மூட்டையாக்கும் செலவுகூட, இலாபத்திற்கும், நட்டத்திற்கும், வளர்ச்சிக்கும் விழ்ச்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காட்டும்.

சுப்பசக் இச்செலவை 50% ஆல் குறைக்கிறது. நெல், அரிசி, உபதானியங்கள், கோழி, பால்பண்ணை, நடத்துபவராக இருந்தால், இவை வலுவாக நீடித்து உழைக்கக் கூடியவை என்பதை உணர்வீர்கள். பகட்டையும் பார்வையையும் தருவதுடன், இவை வசதியாக அச்சிடக் கூடியவை.

இதுமட்டுமல்ல, தயக்கமின்றி சாக்குத் தைக்கும் ஊசி நூல் கொண்டு இலகுவாகத் தைக்கலாம்.

காற்று உள்ளே செல்லக்கூடிய மென்மையான சுப்பசக் சூப்பர் சாக்காகிறது.

மைக்கிறீஸ் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

மைக்கிறிஸ் குழுவின் கூட்டு நிறுவனம்

81, வோர்ட் பிளேஸ், கொழும்பு 7.

தொலைபேசி: 98633 - 4, 98359.

**சுப்பசக**

**பொலிபுறோபிலின் சாக்குகள்**

RJA1145


தவக்கால நற்சிந்தனை



### தீர்ப்பிடாதீர்கள் தீர்ப்பிற்கு உள்ளாக மாட்டீர்கள்

நாம் எமது வாழ்வில் பலரையும் பலவாறு தீர்ப்பிட்டிருக்கிறேம். நாம் இவ்வாறு நேரடியாகவும் மறைமுகமாகவும் தீர்ப்பிடுவதால் பலரையும் பலவிதமான மனத்தாங்கல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாக்கி இருக்கிறேம், சில சமயங்களில் நமது தீர்ப்பு முற்றிலும் பிழையானது என்று தெரிந்தும் வேண்டுமென்றே பிழையாகத் தீர்ப்பிடுகிறேம். இதனுல் பலரையும் ஏமாற்றியும் வருத்தப்படுத்தியும் இருக்கிறேம். சரியாக தீர்ப்புக் கொடுக்கவேண்டிய உயர்பதவிகளில் இருந்தே தெரிந்து கொண்டு தவருகவும் தீர்ப்பிட்டிருக்கிறேம்

தீர்ப்பிடாதீர்கள் [நீங்களும் தீர்ப்பிற்கு உள்ளாக]மாட்டீர்கள்' என்ற உமது வார்த்தைகளை தெரிந்தும் தெரியாமலும் செய்த இக்குற்றத்தை மன்னியும். இனிமேலும் வேண்டுமென்றே தவருக] தீர்ப்புக் கொடுக்காதிருக்க [எங்களுக்கு துணைபுரியும்.

அருட்செல்வன் ம. ரூபன்

# எம். ஜி. ஆர். பெருந்தன்மையானவர்! கலைஞர் பிரசங்கத்துக்கு அழைத்தார்!!

"தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். என்மீது பெருமதிப்பு வைத்திருக்கிறார். தமிழாராய்ச்சி மகாநாடு மதுரையில் நடந்தபோது, என்னைப் பங்கு பற்றச் செய்து, கௌரவம் தந்தார்; நிதி கேட்டபோதெல்லாம் அள்ளித்தந்து, 'நீங்கள் ஏன் வந்தீர்கள்? சொல்லி அனுப்பினால் நானே நேரில் வரமாட்டேனா?' என்று கூறிய அவரது பெருந்தன்மையை என்னால் மறக்க முடியாது."

இடம்பெறச் செய்தார்" என்று வாரியார் பதில் சொன்னதும், பக்திச் சுவை சொட்டச் சொட்ட இந்து மதத்தின் தெய்வப் புகழ்பரப்பும் சுவாமிகளை நாத்திகரான கலைஞர் என்ன பேச்சுப் பேசச் சொல்லியிருப்பார் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

அதற்குள் அருள்மொழியரசு அதற்கும் பதில் சொல்லிவிட்டார்:

'மனிதனும் தெய்வமாகலாம்' என்பதே கலைஞர் எனக்

## அருள்மொழியரசுடன் ஒரு சந்திப்பு

என்று அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் இவ்விதம் எம்.ஜி ஆரின் பண்புகளைப் புகழ்ந்துரைத்துக் கூறியபோது, நான் விட்டுவிடவில்லை! "அப்படியானால் கலைஞர் கருணாநிதியைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"கலைஞர் என்னைப் பிரசங்கம் செய்ய அழைத்தாரே! மயிலாப்பூர் 'கருணை இல்லம்'த்தில் என்னுடைய பேச்சை

குத் தந்த தலைப்பு. அருமையான பொருள் நிறைந்த என் பேச்சுக் கலைஞரைக் கவர்ந்தே விட்டது!"

வல்வெட்டித்துறைச் சிவன் கோவிலில் வாரியார் சுவாமிகள் பிரசங்கம் இப்போது தொடர்ந்து நடைபெறுகிறது. அந்த ஊரிலேயே தங்கியிருக்கும் சுவாமிகளைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. காலை ஏழு மணிக்கு அருள்மொழி அரசு தங்கியிருந்த, நஜீரியா

வில் விரிவுரையாளராக இருக்கும் தியாகராஜா இரத்தின சபாபதி அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். அங்கு பூஜை அறையில் இருமணி நேரம் சுவாமிகளுடன் உரையாடினேன். மிகுந்த உற்சாகத்தோடு நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் தந்தார்.

"தலைமுறை இடைவெளி" பற்றிக் கேட்டேன். "தவிர்க்க முடியாதது" என்று சென்ன வாரியார்," இளந்தலைமுறையினரை நல்வழிப்படுத்துவதற்காகவே நான் பெரிதும் முயற்சிசெய்துவருகிறேன். நாவினால்பேசியும், பேனாவினால் எழுதியும் இளைஞர்களுக்கு சமயப்பற்றுஏற்படக்கூடிய முயற்சியில் ஈடுபட்டுவருகிறேன்" என்று சுருக்கமாகக் கூறினார்.

வல்வெட்டித்துறை மீதும் இவ்வூர் மக்கள்மீதும் சுவாமிகள் இறுக்கமான பற்று வைத்திருக்கிறார்.

"1944ம் ஆண்டு முதல்முறையாக வல்வைக்கு சிவன்கோவிலில் பிரசங்கம் செய்ய வந்தேன். மூன்று நாள் பிரசங்கம் செய்தேன். அடுத்தாண்டு 15 நாள் விரிவுரை செய்தேன். பிரசங்கநேரத்தில் ஒருவராவது சட்டை போட்டுக் கொள்ளாது, நெற்றியில் திருநீறு, சந்தனம் அணிந்து பக்திப் பரவசத்தோடு சமயச்சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புற்றனர். நான் அப்போது வரும்போது 'விசா' பிரச்னை இல்லை சர்வசாதாரணமாக வந்துபோகலாம். அதனால் பலதடவை வந்து சொந்த ஊர்மாதிரி நின்றுபோனேன்.

### - அருட்செல்வம் -

வல்வெட்டித்துறை என்ற ஊர் தாய்போல் பரிந்துஉபசரிக்கும் தன்மை பொருந்தியது. குறிப்பாக சிவன் கோவில் அதிபர் வெங்கடாசலம், அம்மன் கோவில் அதிபர் வ.இ.இராமசாமிப்பிள்ளை, பயில்வான்போன்ற அன்பர்கள் என்மீது பெரும் அன்பு காட்டியவர்கள். 21 ஆண்டு காலம் உருண்டோடிவிட்டது. இப்போது வந்துள்ளேன். பக்தர்கள் இப்போதும் அலைகடல்

(8-ம் பக்கம் பார்க்க)

## ரூப வாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-01 | குழந்தைகளுக்கான நிகழ்ச்சி |
| 6-20 | ஜேர்மன் மொழி-நிகழ்ச்சி 12 |
| 6-35 | ஆங்கிலக்கதை |
| 7-00 | செய்தி மஞ்சரி [தமிழ்] |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-15 | கல்வி நிகழ்ச்சி |
| 7-45 | நகைச்சுவை நிகழ்ச்சி [சிங்களம்] |
| 8-15 | செய்தி மஞ்சரி [சிங்களம்] |
| 8-29 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 8-30 | மேற்கத்தைய இசை |
| 9-30 | செய்தி மஞ்சரி [ஆங்கிலம்] |
| 9-45 | துப்பறியும் தொடர் நவீனம் |
| 10-40 | ஒளிபரப்பு முடிவு |

## உரிமையைக் கேட்பதா...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரித்தேன் இன்று இரத்தம் ஓடுகிறது.

ஜனாதிபதி புதுடில்லியில் தெரிவித்த சிங்கள தீவிரவாதிகள் தமிழ்த் தீவிரவாதிகள் என்ற கருத்தையும் பண்டிதர் தமது உரையில் ஆராய்ந்தார்.

நாம் எமக்கு முன்பு இருந்த உரிமையைக் கேட்பது தீவிரவாதமா? அல்லது உங்களின் உரிமைகளைத் தரமாட்டோம் உங்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருப்போம் என்பது தீவிரவாதமா? முன்னைய அரசியல் சாசனம் ஒரு அடிப்படைச்சாசனம் என்று கூறினேன்.

இன்றைய அரசமைப்பை ஒரு தூக்குக் கயிறு என்று கூறுகிறேன் என்றும் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் விவகாரம் குறித்து அடிக்கடி சபையில் குரல் கொடுத்துவரும் பண்டிதர் இம்முறையும் விடவில்லை. 4,582 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாகவும் உடன் அப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்,

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆலோசனையுடன் அமைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை தமிழ் ஈழத்துக்கு வழி அமைக்காது என்றும் அந்தச் சபைகள் தமிழ்ஈழத்துக்கு ஈடாக மாட்டாது என்றும் வடக்கில் பயங்கரவாதிகள் என்று கூறப்படுவோரே இச்சபைகளை எதிர்க்கிறார்கள் என்றும் கூறினார்.

வடக்கில் வன்முறைச் சம்பவங்கள் ஏன்? எப்போது ஆரம்பிக்கப்பட்டது? என்று விளக்கிய பண்டிதர், வடக்கில் இராணுவத்துக்கென பல திட்ட வேலைகளுக்கு பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வாறு பணம் ஒதுக்கப்படுவதாலும் அமைச்சர் ஒருவர் முன்பு கூறியதுபோல் அந்த இளைஞர்களை 'பயங்கர நாய்கள்' என்று வர்ணிப்பதாலும் அவர்களின் நடவடிக்கைகளை அடக்கிவிட முடியாது என்றும் தெரிவித்தார்.

வடக்கில் இராணுவத் திட்டங்களுக்கு பெருமளவில் பணம் ஒதுக்கிவிட்டு தமிழ் மக்களின் ஊனோடும் உயிரோடும் கலந்துவிட்ட தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிடுமாறு எப்படிக் கேட்க முடியும் என்றும் கூறிய அவர் பயங்கரவாதத்துக்கான காரணத்தை ஆராய்ந்து அதற்குத் தீர்வுகாணுமாறும் அழைப்பு விடுத்தார்.

இந்த விவகாரத்தில் அணிசேரா மகாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரை உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவை பற்றிப் பேசப்பட்டது கடந்த ஆட்சியாளரின் நடவடிக்கை குறித்து இன்றைய ஆட்சியாளரும், இன்றைய ஆட்சியாளரின் நடவடிக்கை குறித்து கடந்த ஆட்சியாளரும் கண்டனம் தெரிவித்துக்கொண்டனர்.

இதனால் இந்த நாட்டில் வாழும் 145 லட்சம் மக்களுக்கும் என்ன பலன் கிடைக்கப் போகிறது என்றும் வினவிய வவுனியா சிவா, உணவில் தன்னிறைவைத் தேடித்தருகின்ற-நாட்டுக்காக இரத்தத்தையும் வியர்வையையும் சிந்துகின்ற வாயில்லாத, வாய் பேசமுடியாத ஏழை விவசாயிகள் பற்றி அரசு சிந்திப்பதில்லை என்றும் தங்களுக்குத் தேவையான பணக்காரர் பற்றியே அரசு சிந்தித்துவருகின்றது என்றும் குறை கூறினார்.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் அதிகாரத்திமிரை தாங்கள் என்றுமே அனுமதிக்கவில்லை என்றும் கூறிய சிவா, அரச உறுப்பினருக்கு உள்ளத்தால் நினைத்ததைப் பேசமுடியாத நிலை என்றும் தாம் நினைத்ததை எல்லாம் பேச முடியும் என்றும் இவ்விஷயத்தில் கூட்டணி எம். பி.க்கள் அரச எம்.பி.க்களைவிட மேலானவர்கள் என்றும் கூறுகிறார். நீண்ட உரைநிகழ்த்தியவனுரா இன்றைய அரசைக்கண்டிப்பதிலேயே தமது முக்கால் வாசிப்பங்கு நேரத்தையும் செலவிட்டார். அனேகமாக அவருக்குப்பின் பேசிய சகல அரசாங்ககட்சி உறுப்பினரையுமே தமது உரை குறித்து பேச வைத்துவிட்டார்,


திறமைமிக்க கூட்டணி உறுப்பினர்களின் திறமை பிராந்தியக் கட்சியில் அவர்கள் இருப்பதால் வீணாக விரயமாகின்றது என்று கவலை தெரிவித்த பிரதமர் அவர்களை ஐக்கியதேசியக்கட்சியில் அல்லது வேறு தேசியக்கட்சியில் சேருமாறு அழைப்பு விடுத்தார். மொத்தத்தில் பட்ஜட்டை எதிர்க்கட்சியினர் எதிர்த்தனர் அரசாங்கக்கட்சியினர் ஆதரித்தனர்.

### நீலனின் கன்னி உரை

வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் புதன்கிழமையன்று தமது கன்னிப்பேச்சைநிகழ்த்தினார்.

சட்டத்துறை கலாநிதியான அவர் பொருளியல் துறையிலும் கலாநிதி பட்டம் பெற்றவர் என்று எண்ணும் வகையில் வரவுசெலவுத்திட்டத்தை சுமார் ஒரு மணித்தியாலமாக நன்றாக அலசி ஆராய்ந்தார். சகலரதும் பாராட்டையும் பெற்றுக்கொண்டார்.

அவரது உரையை வார்த்தைக்கு வார்த்தை தமதுஉரையின்போது பாராட்டிய பிரதமர், டாக்டர் நீலன் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்திருந்தால் இதைவிட சிறந்த உரையை நிகழ்த்தியிருப்பார் என்றும் கூறினார்.



## கொம்புத்தேனீ சகுனம்: பிரதமருக்கு அனுபவம்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தல் பிரசாரத்தின்போது நுவரேலியா ஐ. தே. க கட்சி அலுவலகத்திற்கு சென்றேன. அங்கு கொம்புத்தேனீ கூடு கட்டியிருப்பதாக சொன்னார்கள். அது நல்ல சகுனம் என்றும் சொன்னார்கள், அப்படியே ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று விட்டோம்.

பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது இப்புதிய பாராளுமன்றத்திலும் கொம்புதேனீ கூடுகட்ட வந்திருப்பதாக சொன்னார்கள் அது நிதியமைச்சருக்கு நல்ல சகுனம். அத்துடன் வட்டு எம். பி. திரு. நீலன் திருச்செல்வம் வந்திருப்பதும் ஒரு நல்ல சகுனமாகும். [இ]

## நாளை பொலிஸ் நினைவு தினம்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ்திணைக்களத்தின் பொலிஸ் நினைவு தினம் திங்கட்கிழமை நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

பம்பலப்பிட்டியிலுள்ள பொலிஸ் மைதானத்தில் விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறும். நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் கடமை நேரங்களில் உயிர் நீத்த பொலிசாருக்காக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படும். (உ)

## அதிகரிப்பு

[மன்னார்]

எரிபொருள் விலை பஸ்கட்டண உயர்வு ஆகியவற்றைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் மினிபஸ்களுக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மினிபஸ்களுக்கான கட்டணம் 25 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பகிஷ்கரிப்பு தொடர்கிறது

[மன்னார்]

அவசரத் தந்தி மூலம் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள மன்னார் சூரியகட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரின் இடமாற்றத்தை உடன் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

இவ்வாறு கடந்த 10ம் திகதி முதல் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வரும் சூரிய கட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலைக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

இம்மகஜரில் திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட எமது அதிபரின் இடமாற்றம் இரத்துச் செய்யப்படும் வரை எமது பகிஷ்கரிப்பு இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட்டு. எம். பி.யின் அலுவலகம்

[சுழிபுரம்]

வட்டுக்கோட்டைத்தொகுதி புதிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. நீலன் திருச்செல்வத்தின் அலுவலகம் சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்திற்கு அருகாமையில் அமையவிருக்கிறது. அமரர் திருநாவுக்கரசுவுக்குச் செயலாளராகவிருந்த திரு. நாக. பத்மநாதனே செயலாளராகக் கடமையாற்றவுள்ளார்.




நெடுந்தூர ஓட்டத்துக்குக் கச்சிதமானது
லோட்டஸ் டயர்களும் டியூப்களும்
இலங்கையின் அதிநவீன தொழிற்சாலையில் ஜப்பானிய கைத்தொழில் தரநிர்ணய விவரணங்களுக்கிணங்க உற்பத்தி செய்யப்பட்டு இலங்கைக் கட்டளைகள் பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. இவை தரத்திற் சிறந்த இயற்கை ரப்பரையும் இறக்குமதி செய்த மூலப் பொருட்களையும் கொண்டு கடும் தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு உருவானவை ஆதலின் நீடித்துழைக்கின்றன.

| | | கொழும்பு | மற்றய இடங்களில் |
|---|---|---|---|
| சாதாரணம | டயர்கள் | ரூ 39.75 | ரூ 40/- |
| | டியூப்கள் | ரூ 11.40 | ரூ 11.50 |
| தொடுப்பு இல்லாதது | டியூப்கள் | ரூ 14.60 | ரூ 14.70 |

லோட்டஸ் டயர்களும் டியூப்களும் ஒல்லாந்து, பெல்ஜியம் மற்றும் பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளிலும் பாவிக்கப்படுகின்றன. கரடுமுரடான பாதைகளிலும் இவை கடுமையாக உழைக்கின்றன.

ஜப்பானிய தொழில் நுட்ப முறையைக் கையாண்டு இன்றுவரை 25,000,000 உற்பத்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விற்பனையாகியுள்ளன.

**அசோசியேட்டட் ரப்பர் புரோடக்ஸ் லிமிட்**

AMW **அசோஸியேட்டட் மோட்டார்வேய்ஸ் குருப் ஓவ் கொம்பனீஸ்**

185, யூனியன் பிளேஸ், கொழும்பு-2 தொலைபேசி : 33371—8

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
BLIND RAGE
(Action- Thrill)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-3
22-3-83 வரை
சரத்பாபு-சுஹாசினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே

மனோகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
ஜெமினி - சுப்பையா
கப்பலோட்டிய தமிழன்

## இன்று வாரியார் கதாப்பிரசங்கம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இன்று பிற்பகல் 'அம்பிகையின் அருள்' என்னும் பொருள்பற்றி அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் கதாப்பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார். (வெ)

## தையல் தொழில் பயிற்சி நிலையம்

[புலோலி]

புலோலி தெற்குப் பகுதியில் உள்ள இளம் பெண்களுக்குத் தையல் பயிற்சியளிக்கும் முகமாக புலோலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தையல் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இத்தையல் தொழிற்பயிற்சி நிலையம் திரு. வேணுகோபால் தலைமையில் புலோலி தெற்கு கிராம சேவை அலுவலர் திரு. வேலாயுதபிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. [க]

றீகல் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும்
ஜெய்சங்கர் லட்சுமி
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)
25-3-83 முதல் சட்டம் ஒரு இருட்டறை (கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் — சௌகார்ஜானகி
துணைவன்

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (சினிமாஸ்கோப்)
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
(கலர்)

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 19—20
போன்: 23642
எம்.ஜீ.ஆர்.-லதா-நம்பியார்
நீதிக்குத் தலைவணங்கு
(புதிய பிரதி)

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல் கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
மற்றும் பலர் நடித்த
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
"சரிதா" இப்படத்தில் நடித்ததன்மூலம் சிறந்த நடிகைக்கான ஜனாதிபதி விருதுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட்

## பழைய மாணவர் இன்று மோதுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் '40 ஓவர்' கொண்ட கிரிக்கெட் போட்டி, இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கு வைத்திய கலாநிதி டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் தலைமை தாங்குகிறார்.

### '50 ஓவர்' கிரிக்கெட்

யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்கும் யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில், '50 ஓவர்' கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று காலையாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (வி)

## நடப்பு வருட நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

அராலி வடக்கு சனசமூக நிலையத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: நா. நடனசண்முகதாசன், செயலாளர்: ப. கருணானந்தன், பொருளாளர்: க. நாகஜெயக்குமார், உபதலைவர்; ந. நவகுலராஜா, உபசெயலாளர்; ந. கலைச்செல்வன், கணக்காளர்கள்; நா. ஜெயநாயகம், செ. பரமசிவம்பிள்ளை எட்டுப்பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

[யாழ்ப்பாணம்]

யாழ் நாச்சிமார் கோயிலடி சுடரொளி சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: க. அப்புக்குட்டி, காப்பாளர்: க. மாயாதிரவியம் தலைவர்: கே. நாகலிங்கம், உபதலைவர்; அ. ஞானப்பிரகாஷ் டாஸ், இணைக்காரியதரிசிகள்: த. பரமலிங்கம், வே. தர்மராஜா, பொருளாளர்: கி. செல்வராஜா.

19பேர் கொண்டசெயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## லில்லி இல்லம் முதலிடம்

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் லில்லி இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

மேற்படி கல்லூரி இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி கல்லூரி மைதானத்தில் அதிபர் அருட்செல்வி பிடலிஸ் தலைமையில் நடைபெற்றது. கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்டார்.

லில்லி இல்லம் முதலாம் இடத்தையும், டெய்சி இல்லம் 2-ம் இடத்தையும், றோஸ் இல்லம் 3-ம் இடத்தையும் பெற்றன. [ச]

## இடமாற்றம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய போக்குவரத்துபொறுப்பதிகாரியாக கடமையாற்றிய திரு. நா. சேனாதிராஜா திருகோணமலை போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ச]

# கலையரசு சொர்ணலிங்கம் நினைவுப் பணிக்குழு

(கொழும்பு)

ஈழத்தமிழ் நாடகத் தந்தை என மதிக்கப்படும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் நாடகப் பணிகளை மேற்கொள்வதற்கென "கலையரசு சொர்ணலிங்கம் நினைவுப் பணிக்குழு" என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கலையரசரின் மறைவையொட்டி கடந்த ஜூலை மாதம் 9-ம் திகதி "கலை இலக்கிய பத்திரிகை நண்பர்களால்" தலைநகரில் நடத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு இணங்கவே இக்குழு அமைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்துணைவேந்தர் திரு. சு. வித்தியானந்தனைத் தலைவராகவும், கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜாவைச் செயலாளராகவும் கொண்ட இக்குழுவில் கலை, இலக்கிய, நாடக, பத்திரிகைத் துறையைச் சேர்ந்த பலரும் இடம்பெற்றுள்ளனர்.

1988-89-ம் ஆண்டில் கலையரசரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் ஆறாண்டுத் திட்டமொன்றை வகுத்துச் செயற்படுத்துவது என்று இக்குழுவின் முதற் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முதற்கட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக, யாழ் மாநகர சபையின் நிர்வாகத்திலுள்ள திறந்தவெளி அரங்குக்கு "கலையரசு சொர்ணலிங்கம் அரங்கு" என்று பெயர் சூட்டுமாறு யாழ் மாநகர சபை முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அடுத்ததாக ஆனைக்கோட்டைச் சந்தி முதல் நவாலி வரையிலான பிரதானவீதிக்கு "கலையரசு சொர்ணலிங்கம் வீதி" என்று பெயர் வைக்குமாறு இக்குழு, யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவரிடம் வேண்டியுள்ளது.

கலையரசு அவர்களின் 94 வது பிறந்த தினம் இம்மாதம் 30-ம் திகதியாகும்.

## பாராட்டும் விருந்தும்

(மாவிட்டபுரம்)

இலங்கை இளங் கலைஞர் மன்ற ஆதரவில் "கலாசூர்ய" விருதுபெற்ற நாதசுர வித்துவான் என். கே. பத்மநாதனுக்கு இன்று யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் பாராட்டும் இராப்போசன விருந்தும் அளிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. வே. ஞானச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விருந்தில் பல பிரமுகர்கள், கலைஞர்கள், கலாரசிகர்கள் கலந்து கொள்வார்கள்.

## புதிய தலைவர்கள்

[யாழ்ப்பாணம்]

அளவெட்டிதெற்கு கிராமோதயசபையின் தலைவர்தெரிவுக் கூட்டம் அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை மண்டபத்தில் விசேடசேவை அலுவலர் திரு. செ. சிவயோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பல்வேறு நிறுவனங்களின் தலைவர்கள் சமூகமாயிருந்தனர். திரு ச. அப்பாத்துரை ஏகமனதாக புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் கடந்த ஆண்டிலும் இக்கிராமோதய சபைத் தலைவராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அளவெட்டி பொலிஸ்- பொதுமக்கள் தொடர்புச் சபையின் தலைவராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

### அளவெட்டி வடக்கு

அளவெட்டி வடக்கு கிராமோதய சபை தலைவர்தெரிவுக் கூட்டம் அளவெட்டி வடக்கு சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் விசேட சேவை உத்தியோகஸ்தர் திரு. செ. சிவயோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பண்டிதர் க. நாகலிங்கம், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் போட்டியிட்டனர். பண்டிதர் க. நாகலிங்கம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் சென்ற ஆண்டிலும் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

### அரியாலை மேற்கு

அரியாலை மேற்கு கிராமோதய சபைத் தலைவர் தெரிவு தலைவர்: திரு. ச கருணைநாதன் தலைமையில் நடைபெற்ற போது தலைவராக திருமதி பாலராணி வேல்முருகு தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் ஒரு கலைப்பட்டதாரியும், அரியாலை மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவியும் ஆவார். [ச]

## குடாரப்பு கொலை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணிக்கராஜா, பொலிஸ் கான்ஸ்டபிள் பஞ்சநாதன் ஆகியோர்சாட்சியமளித்தனர். எதிரியின் சட்டத்தரணி ஏறத்குறைய 6 மணித்தியாலங்கள் தொகுப்புரை நடத்தினர்.



[யாழ்ப்பாணம்]

25வருடங்களாக உயர்தர வகுப்புக்களுக்குப் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றி தனது 48 வது வயதில் அண்மையில் யாழ் இந்துக் கல்லூரியிலிருந்து இளைப்பாறிய திரு கந்தையா புவனபூஷணம் திறந்த வெளிப்பல்கலைக்கழக யாழ். பகுதியில் அடிப்படை அறிவியற் பகுதிக்கு பௌதிக விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை விஞ்ஞானப்பட்டதாரியாகப்பட்டம் பெற்றபின்னர் பட்டப் பின் படிப்பு டிப்ளோமாப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்று பட்டதாரி டிப்ளோமா மாணவருக்கு கற்பித்தல் முறைப் பரிசோதகராக கடமையாற்றிய இவர் உயர்தர மாணவருக்கு இருபுது முறைப் பயிற்சிகளை ஆக்கியதுடன் அனைத்துலக முறையில் பொதுப் பௌதிகம், ஒளியியல் நூல்களையும் எழுதியுள்ளார். சர்வதேச ரீதியில் அனைத்துலக முறை அலகுகள் [SI Units] இப்பொழுது உபயோகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இம்முறையில் தமிழில் நூல்கள் இல்லாத குறையை இவரது இந்நூல்கள் ஓரளவு குறைந்துள்ளது.

## வாரியார் இன்று நவக்கிரியில்

[யாழ்ப்பாணம்]

புத்தூர் மேற்கு நவக்கிரி மாணிக்க விநாயகர் கோவில் சங்காபிஷேகம் இன்று ஞாயிறு நடைபெறும்.

இரவு வாரியார் சுவாமிகளின் கதாப்பிரசங்கம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் இடம் பெறும். [வ]

## எம். ஜி. ஆர்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போல் வந்து பரவசமடைகிறார்கள்'' என்று ஊரின் பெருமையைப்பற்றி சிறு பிரசங்கமொன்றையே வாரியார் நிகழ்த்திவிட்டார்.

திருப்பணிகளுக்கும், பக்தி நெறிகளுக்கும், ஏழைகள் வாழ்வுக்குமே பிரசங்கங்கள் மூலம் கிடைக்கும் பணத்தையெல்லாம் செலவு செய்துவரும் வாரியார் சுவாமிகளின் சுத்தமான—தன்னலமற்ற தெய்வீகப் பணியை காஞ்சி காமகோடிப் பெரியாரே பாராட்டிச் சிறப்பித்துள்ளார்கள்.

### செம்மங்குடியின் சிஷ்யை

சுவாமிகளுடன் எமது சந்திப்பின்போது கூட இருந்த பெண்மணியைப்பற்றி வாரியாரிடம் கேட்டேன். 'பம்பாய் கோமதி சுவாமிநாதன். இவர் எனது அபிமானப் புதல்வி. சுவாதித் திருநாள் மியூசிக் அக்கடமியில் செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயரிடம் பத்து ஆண்டுகள் இசை பயின்றவர். வீணையில் மிகப் பாண்டித்தியம் உடையவர். பம்பாயில் திருப்புகழ் மண்டலி அமைத்துப் பலருக்கும் திருப்புகழ் சொல்லிக் கொடுத்து பக்திப் பயிரை வளர்க்கிறார். இவருக்கு எல்லா வசதிகளும் இருந்தும் பக்திநெறியில் நின்று முத்திநலம் விரும்பி இருக்கிறார்'' என்று அந்த அம்மாளை அறிமுகப்படுத்தினர். வாரியார் சுவாமிகளின் பிரசங்கங்களின்போது அருகே இருந்து நல்ல மனங்கவர் பாடல்களைப் பாடி வருகிறார் கோமதி அம்மாள்.

## சென். பற்றிக்ஸ் . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாக தாக்கியதாக, தமது கல்லூரியின் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியரிடம், எழுதவண்ணம் முறையிட்டார்.

### மத்தியஸ்த்தர்கள் ஓட்டம்

மேற்படிப்போட்டி முடிவடைந்ததும், இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த இரு மத்தியஸ்தர்களையும் ஆவேசம் கொண்ட ரசிகர்கூட்டம் தாக்கமுற்படும்போது இவ்விரு மத்தியஸ்தர்களும் மைதானத்தினுள்ளிருந்து, தாம் ஓய்வு எடுக்கும் கூடாரத்தை நோக்கி மிக வேகமாக ஓடி வருவதைக்காணக்கூடியதாக இருந்தது.

### இருவர் காயமடைந்தனர்

இப்போட்டியில் நேற்றைய தேனீர் இடைவேளைக்கு சற்று முன்பாக யாழ், நூல்நிலையப் பக்கமாக இருந்த பார்வையாளர்கள் மத்தியில் பெரும் கைகலப்பு ஏற்பட்டது.

தர்மது கல்லூரிகளின் கோஷ்டிகளுக்கு உற்சாகமூட்டிக்கொண்டிருந்த மாணவர்களை, வெளியார் சிலர் தாக்கியதால், பெரும் கைகலப்பு ஏற்பட்டது. இதில் பல கதிரைகள் சேதமடைந்தன, இரு சிறுவர்களுக்கு மண்டையில் காயம் ஏற்பட்டது. [வ]

## நடவடிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிகை எழுத்தாளர் இயக்கத்திற்கு அறிவித்துள்ளார்.

இலங்கைப் பத்திரிகைஎழுத்தாளர் இயக்கக் கூட்டம் தலைவர் திரு ஏ. எல். எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெறபோது செயலாளர் திரு எஸ் சி. எஸ் சிதம்பரநாதன் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு சிவகுருநாதன் கடமையிலீடுபட்டிருந்தபோது பத்திரிகை ஆலோசகரொருவரால் தாக்குறைவாக இனத் துவேஷ மனப்பான்மையுடன் ஏசி அவமரியாதைப்படுத்தியதற்குக் கண்டனம் தெரிவிப்பதுடன், இதுபோன்ற நடவடிக்கைகள் இனிமேலும் நடவாதிருக்க ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவைக் கோர வேண்டுமெனக் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சம்பந்தப்பட்ட தங்கள் சங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்ட குற்றச்சாட்டு சம்பந்தமாக லேக்கவுஸ் பத்திரிகை தலைவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. அவரின் விளக்கப்படி அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்துள்ளார்.

## இன்று

[வண்ணார்பண்ணை]

பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் குழுவின் விசேஷ கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் பொலிஸ் கூட்ட மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

வடமாகாண உதவிப் பொலிஸ் அதிபர் திரு இராஜகுரு, யாழ் பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்

பொதுமக்கள் பிரதிநிதிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிப்பர். (அ)

● ●

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ரோட்டறிக் கழகத்தின் ஆதரவில் கோப்பாய் கல்வி வள நிலையத்தில் இன்று புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் கோப்பாய் வட்டார மாணவர்களுக்கும், வசதி குறைந்த பெற்றோருக்கும் இலவச மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது. இப்பணிக்கு கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ. ஏ. தங்கராசா தலைமை தாங்குகிறார். பல வைத்திய நிபுணர்கள் சேவைக்கு வருகின்றார்கள்.


தரத்தில் சிறந்த

**T. D. K. ரேப் வகைகளின் (Video & Audio)**

வடமாகாண ஏக விநியோகஸ்தர்களாக

**V. K. இராசரத்தினம்**

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்தாபனத்தை

நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்

**மகாராஜா இறக்குமதி நிறுவனம்**

54, பாங்சால் வீதி,
கொழும்பு - 11

6595



**ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் யாழ்ப்பாணம்**

**அறிவித்தல்**

மேற்படி தேவஸ்தானத்தின் கன்னாதிட்டி வீதி 174ஆம் இலக்கக் காணியில் குடியிருப்பவராகிய காலஞ்சென்ற வைத்திய கலாநிதி திரு வி. க. விஸ்வலிங்கம் அவர்களின் மனைவி திருமதி வைத்தியகலாநிதி மேரி சோபியா அவர்கள் மேற்படி தேவஸ்தான உத்தரவில்லாமல் அக்காணியில் புதிய கட்டடம் கட்டுவதை ஆட்சேபித்து. யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோடு காணி வழக்கு இல. L 2190 மூலம் தடை உத்தரவைப் பெற்றுள்ளோமென்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

தேவஸ்தான ஆதீன கர்த்தர்கள்.

(6602)



# இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் மனதிற்கேற்ப வசதியான முறையில்

உங்கள் சமையல் அறையை நவீன முறையில்

விஞ்ஞான ரீதியாக இலகுவான முறையில் பாவிப்பதற்கு தகுந்தாற்போல் திட்டமிடப்பட்டு நிர்மாணித்துத் தரப்படும்.


நல்ல தரமான மூலப்பொருட்களால் நிர்மாணிக்கப்படும். இதன்மூலம் நாங்கள் தரும் சேவை உங்கள் வாழ்நாள் முழுவதும் பயன்படும்.

பின்வருவன எங்களால் செய்து தரப்படும்:

- நவீன சமையல் அறைகள்
- நவீன வசதி கொண்ட படுக்கை அறைகள்
- சாலையில் வைக்கப்படும் அலுமாரிகள்
- குளியலறை அலுமாரிகள்
- புத்தக ருக்கிகள்
- தொலைக்காட்சி பெட்டி மேசைகள்

இவைகள் யாவும் உங்கள் விருப்பத்திற்கேற்ப வர்ண போமிக்கா மேல் பட்டைகள் மூலம் தயாரித்து கொடுக்கப்படும்.

மிகவும் கைதேர்ந்த விற்பனர்கள் மூலம் இவைகள் நிர்மாணித்துத் தரப்படும்.




தொடர்பு கொள்ளவும்:

**M. NAGARATNAM & CO**

No. 62, STANLEY ROAD, JAFFNA. Tele. 23606
RICOH HOTEL Tele: 23889, 22464

(6601)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.